★ விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 கார்த்திகை 25 ஸபர் 24 இதழ் 301

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 11—12—82

## "இயக்கத்தின் பேரைச் சொல்லி வயிறு வளர்க்கும் கோஷ்டி!"

### நூலகத் திறப்பு விழாவில் 'யோகேஸ்' எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''விலைமதிக்க முடியாத பெரும் களஞ்சியமான நமது நூலகத்தை இழந்து தவித்த ஒன்றரை வருட காலத்தின் பின்னர் மீண்டும் அதனைப் பெற்று மகிழ்கின்ற இந்நேரத்தில் யாழ்ப்பாணத்தில் இயக்கத்தின் பேரைச் சொல்லி வயிறு வளர்க்கும் கோஷ்டியொன்றின் நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்'' என்று நேற்று யாழ் எம்.பி. திரு. வெ. யோகேஸ்வரன் எச்சரிக்கை விடுத்தார்.

யாழ் பொதுசன நூலகக் கட்டிடத்தில் மீள்வித்துப் புதுப்பிக்கப்பட்டுள்ள அதன் வடபாகத்தையும், அதில் இடம்பெறும் உடனுதவு நூலகத்தையும் வைபவரீதியாக திறந்து வைத்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையிலேயே யோகேஸ்வரன் எம். பி. மேற்கண்டவாறு எச்சரித்தார்.

''யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்களைத் தினசரி இயக்கத்தின் பேரைச் சொல்லி மிரட்டிப் பிழைக்கிற இக்கூட்டத்தின் மீது பொதுமக்கள் மிக மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். இந்தக் கொள்ளைக் கோஷ்டியினர் நடவடிக்கைகளை நாம் கட்டுப்படுத்த வேண்டும்'' என்றும் திரு. யோகேஸ்வரன் தனது பேச்

(8-ம் பக்கம் பார்க்க)

# இயற்கையின் கோரத்தாண்டவம்

# மாத்தளையில் மண்சரிவுக்கு

# 30க்கு மேற்பட்டோர் பலி!

## 24 சடலங்கள் மீட்பு!!

### பல குடும்பங்கள் வீடிழந்து தவிப்பு!!!

(இ. கந்தசாமி)

**இயற்கையின் கோரத்தாண்டவம் நேற்று அதிகாலை மாத்தளை மாவட்டத்தில் மூன்று இடங்களில் முப்பதுக்கு மேற்பட்டவர்களைப் பலி வாங்கிவிட்டது!**

அங்கு ஏற்பட்ட மண்சரிவினால் எழுபதுக்கும் அதிகமான குடும்பங்கள் வீடுகளையும், சொந்தங்களையும், பந்தங்களையும் இழந்து நிர்க்கதிக்குள்ளாகித்தவிக்கின்றன!

மலையக மண்ணில் புதையுண்டு கிடந்த சடலங்களில் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை இருபத்து நான்கு சடலங்கள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

பிட்டகங்கை, தன்தலதன்னை, எல்கடுவை என்ற மூன்று தோட்டங்களில் இந்த மண்சரிவு நடைபெற்றுள்ளது.

நேற்று அதிகாலை 3 30 மணிக்கு பிட்டகங்கையில் முதல் மண்சரிவு ஏற்பட்டது. 250 அடி உயரத்திலிருந்து பெரிய பாறுங்கல் ஒன்று விழுவது போல இருந்ததாம். தோட்டத் தொழிலாளர்கள் வாழும் லயம் மீது 'டடபட' வென்று விமானம் விழுந்து நொருங்குவது போன்று இருந்ததாம். லயத்திலிருந்து குழந்தைகள், பெண்கள், பெரியோர்களின் 'ஐயோ' என்ற அழுகை ஒலியையும் அதைத் தொடர்ந்து என்ன செய்வது என்று தெரியாது அங்குமிங்குமாக சிலர் ஓடியதாகவும், தப்பிய சிலர் தமது பயங்கர அனுபவத்தை விபரித்தனர்.

மூன்று தோட்டங்களிலும் மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே வேளையில் வீடிழந்து தவிக்குப் நூற்றுக் கணக்கானவர்களுக்கு தற்காலிக தங்குமிடம், உணவு வசதிகளைச் செய்து கொடுக்கும் நடவடிக்கைகளில் மாத்தளை அரசாங்க அதிபர் திரு. எச் எம். தென்னக்கோன் ஈடுபட்டுள்ளார்.

மண்சரிவுக்கு இலக்கான இடங்களில் புதையுண்டு போன சில பகுதிகளுக்குச் செல்லமுடியாத நிலையும் ஏற்பட்டுள்ளதாம்

மாத்தளை மாவட்டத்தில் தொடர்ந்து பெரும் மழை கடந்த சில தினங்களாகப் பெய்துவந்தது. ஓரளவுஇன்று சீரடைந்துள்ளது. ஆயினும்

(8-ம் பக்கம் பார்க்க)

இருதடவை மணம் முடித்து

## வெளிநாடு செல்வதற்கு முயற்சித்தபோது சிக்கினர்!

[யாழ்ப்பாணம்]

இருதடவை பதிவுத் திருமணம் செய்ததாகக் கூறப்படும் ஒருவர், இரண்டாவது திருமணத்தின்போது பெற்ற பத்தாயிரம் ரூபா சீதனப் பணத்தைக்கொண்டு வெளிநாடு செல்ல முயற்சித்தபோது பொலிசாரிடம் சிக்கிக்கொண்டார்.

சந்தேகநபரான பருத்தித்துறையைச்சேர்ந்த பொன்னம்பலம் பாலசுப்பிரமணியம் 76 ஆகஸ்ட் 4-ம் திகதி அதே ஊரைச் சேர்ந்த பரமேஸ்வரியைத் திருமணம் செய்ததாகவும் இவர்களுக்கு 4பிள்ளைகள் உண்டென்றும் 82 செப்டம்பர் 17ம் திகதி ஏரியாலையில் இலட்சுமிப்பிள்ளையைப் பதிவுத் திருமணம் செய்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

யாழ் விசேட குற்றத் தடுப்புப் பிரிவைச் சேர்ந்த கான்ஸ்டபிள்களான வி. இராமலிங்கம் எஸ். ஸ்டீபன் ஆகியோர் சந்தேகநபரை கைது செய்து யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். இம்மாதம் 16-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (மா)

குஞ்சுப்பரந்தனில் வெறியாட்டம்:

## துப்பாக்கிமுனையில் நகை, பணம் கொள்ளை!

(கிளிநொச்சி)

குஞ்சுப் பரந்தன் பொறிக்கடவையில் துப்பாக்கிமுனையில் நால்வர் அடங்கிய கொள்ளைக் கோஷ்டியினால் 15,000 ரூபா நகைகளும், 10,000 ரூபா ரொக்கப்பணமும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

இக்கோஷ்டியினர் வீட்டில் இருந்தவர்களை சித்திரவதை செய்து துன்புறுத்தி வெறியாட்டம் நடாத்தியதாகவும், துப்பாக்கியால் பல தடவை சுட்டுப் பயமுறுத்தியதாகவும் இச்சம்பவம் பற்றிக் கூறப்படுகிறது

பரந்தன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை முகாமையாளர் குருசாமி விஜயரத்தினம் வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுள்ளது

நள்ளிரவு மனைவியுடனும், பிள்ளைகளுடனும் அவர் ஆழ்ந்த நித்திரையிலிருந்தபோது கதவையுடைத்து வீட்டிற்குள் புகுந்த கொள்ளைக் கோஷ்டியினர் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தினர்களாம். அதன்பின் விஜயரத்தினத்தின்முகத்தை துணியால் மூடிக்கட்டி கட்டிலுடன் கயிற்றால் பிணைத்துக் கட்டியதாகவும் கூறப்படுகிறது.

பின்னர் மனைவியைப் பயமுறுத்தி நகைகளையும், பணத்தையும் கொள்ளையடித்ததாக கூறப்படுகிறது.

கொள்ளையடித்து செல்லும் போது இளம் மனைவியின் காதில் காணப்பட்ட சிறு தோட்டை பார்த்துட்டு அந்தத்தோட்டையும் கொள்ளையடித்துச் சென்றதாகக் கூறப்படுகிறது.

கிளிநொச்சியை சேர்ந்த நால்வரை கைது செய்து விசாரணை செய்து வருகின்றனர்.

வருகிறது நத்தார்

அழைக்கிறது ஐடியல் ஏஜென்சி

★ கேக் ★ ஐஸ்கிறீம், ★ பழரச பானங்கள் ★ இன்சுவைச் சிற்றுண்டிகள்

தயாரிக்கத் தேவையான சகல பொருட்களும் நிதான விலையில் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளலாம்,

- ஐடியல் ஏஜென்சி -

"ESSENCE CANAL"

239, மின்சார நிலைய வீதி,

யாழ்ப்பாணம்.

T. PHONE 23648 5422

லெபனான் வேலையாட்கள் தெரிவு

வயது குறைக்கப்பட்டுள்ளது

இன்று மட்டுமே நேர்முகப் பரீட்சை

வயது 21 தொடக்கம் 36 வரை

ஹவுஸ்மெயிட் — வயது 2 தொடக்கம் 38 வரை

மெக்கானிக்குகள் வயது 24 தொடக்கம் 36 வரை

தொடர்பு: ஏழு (7) புகைப்படங்களுடன்

N. சிவப்பிரகாசம்

54, 3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

தலைமை அலுவலகம்:

VAUXHALL MILLS CORPORATION
36/56 Edmonton Road,
Kirillapone,
Colombo - 6

தொழில் அனுமதிப்பத்திரம் இல; -35

தொழில் அங்கீகாரம்: இல: - J/FE/82 (5454)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

EL 4122 ஒஸ்ரின் டெவன் மொடல் கார் (சொந்தப் பாவிப்பிலுள்ளது) விற்பனைக்குண்டு, தொடர்பு; திருமதி ரி. வி. ஜி. பெர்னாண்டோ, இல. 18, மேல் இந்திபெத்த, மொறட்டுவ. (5407)

ஊரெழு பலாலி றோட்டிலிருந்து 100 யார் தூரத்தில் கரந்தன் றோட்டுக்கு அண்மையில் 17 பரப்பு தோட்ட நிலம் விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி, சபாபதி இராசதுரை பிள்ளையார் கோவில் கிழக்கு ஒழுங்கை, ஊரெழு. 5400

யாழ். நகரில் பிரபலமான ஓர் அச்சகம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 248/5, கே. கே. எஸ். றோட், யாழ். நகர். 5425

பிரபல்யமான பாடசாலைகளுக்கும், புகையிரத, பஸ் போக்குவரத்துக்கும் அரசாங்க அலுவலகங்களுக்கும் அண்மையிலுள்ள வீடு கட்டத்தக்க காணி 5 பரப்பு உடன் விற்பனைக்கு. தொடர்பு: 74/1. கந்தர் மணியம்வீதி, கொழும்புத்துறை தபால் நிலையத்துக்கு அண்மையில். 5424

ஆனைக்கோட்டையில் சகல வசதியும் அமைந்த வீடும், காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: சபாபதி சூரியகுமார் (Co-op. மனேஜர்), கோண்டாவில் - கிழக்கு, கோண்டாவில். 5393

பருத்தித்துறையில் காணி விற்பனைக்குண்டு கிணற்று வசதியுடன் கூடிய வீடுகட்டுவதற்குரிய வெறும் நிலம் நிர 2½ விற்பனைக்குண்டு. பருத்தித்துறை (Hartley College Hostel)க்குதெற்கேயுள்ள றோட்டிலிருந்து (தற்போது வியாபாரி மூலை றோட்) ¼ மைல் தூரம்வலப்பக்கமாய்உள்ளது. காகிதம் மூலமாகவோ அல்லது நேரடியாகவோதொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: K. இராஜசேகரம், சட்டத்தரணியும், பிரசித்தநொத்தாரிசும், புலோலி மேற்கு, புலோலி. 5383

சாவகச்சேரி
ப. நோ. கூ. சங்கம்

### வெற்றுச்சாக்கு விற்பனை

ஐயாயிரத்திஐந்நூற்றிநாலு வெற்றுச்சாக்கு கொள்வனவு செய்வதற்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகிறது. கேள்விகள் சங்கத்தில் வைப்புப்பணம் ரூபா 300/-ம், கேள்விப்பணம் ரூபா 5/-ம் செலுத்திப்பெற்ற படிவத்தில் 24-12-82 மு. ப. 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விகள் மெழுகிட்ட உறையில் ''சாக்குக் கேள்வி'' என்று எழுதிப் பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். அல்லது சங்கத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியுள் இடப்படவேண்டும். கேள்விகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ சங்கத்தின் இயக்குனர் சபைக்கு உரிமையுண்டு.

பொதுமுகாமையாளர்,
சாவகச்சேரி
ப. நோ கூ. சங்கம்.
சாவகச்சேரி,
9-12-82. 5435

## தேவை

நாவற்குளியில் இருக்கும் பனந்தும்புத் தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு ஆண்/பெண் வேலையாட்கள்தேவை 12ம் திகதி ஞாயிறு மாலை 3 மணிக்கும் 5 மணிக்குமிடையில் கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வரவும். த குணசிங்கம், 5/1, முதலாம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 5431

## WANTED

Honest, middle aged fluent in English and well educated Partners or business purpose if you are interested in this field apply on or before 18-12-82. The Advertiser, Adv. No: 5398, C/o Eelanadu, Jaffna

5398

## அறிவித்தல்

யாழ்ப்பாண
மாநகராட்சி மன்றம்

19ஆம் வட்டாரத்தில் வடக்கில் நாவலர் வீதியையும், கிழக்கில் மானிப்பாய் வீதியையும் எல்லைகளாகக் கொண்ட மாவடி வீதிக்கு ''ஹாஜி அபுசாலி வீதி'' எனப் பெயரிட இம்மன்றம் தீர்மானித்துள்ளது.

எனவே, இது சம்பந்தமாக எவராவது தமது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் இன்றிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்துமூலம் தமதுகருத்துக்களை காரணங்காட்டி தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

சு. வ. திருநாவுக்கரசு,
பதில் ஆணையாளர்.
மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
3-12-82. 5427

## ஓராண்டு நினைவஞ்சலி



அருளானந்தம்
சின்ராஸ் றெபேட்

தோற்றம்; 7-5-1964
மறைவு: 11-12-1981

அன்பின் இறைவா! உம் அடியானாகிய றெபேட் மீது உம் கரங்கள் என்றும் நிழலிடுவதாக! எங்கள் செல்வனின் ஆத்மசாந்திக்காக அல்லைப்பிட்டி சென்பிலிப்ஸ் ஆலயத்தில் இன்று 4-30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயறும்
பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர்மார்,
மருமக்கள், உறவினர்,
நண்ப நண்பிகள்.
2-ம் வட்டாரம்.
அல்லைப்பிட்டி. (5432)

சங்கானைஉதவி அரசஅதிபர்அலுவலக

# உணவுமுத்திரைத்திருட்டு வழக்கு தள்ளுபடி

(மாவிட்டபுரம்)

உணவுமுத்திரைகளைத் திருடியதாக உதவி அரசாங்க அதிபர் அலுவலக ஊழியர் மீது தொடரப்பட்ட வழக்கில்சாட்சிகளான பொலிசார் 5 தவணைகளாக சமூகமளிக்காமையால் அவ்வழக்குதள்ளுபடி செய்யப்பட்டது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் உதவி அரசாங்க அதிபரின் பொறுப்பிலிருந்த 2,925 ரூபா பெறுமதியான 29 உணவு முத்திரைகளை திருடியதாகவும், திருடப்பட்ட 16உணவு முத்திரைகளை வைத்திருந்ததாகவும் மேற்படி அலுவலக ஊழியரான எஸ் சவரிமுத்து என்பவர் மீது குற்றஞ்சாட்டி காங்கேசன் துறைப் பொலிசார் இவ்வழக்கை மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர்.

இவ்வழக்கு ஏற்கனவே விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் சங்கானை உதவி அரசாங்க அதிபர் ஆ செந்தில் வடிவேல் சங்கானையைசேர்ந்த உத்தரவுபெற்ற வியாபாரி நடராசா மனோகரன் ஆகியோர் சாட்சியமளித்திருந்தனர்.

மேற்படி உணவு முத்திரைகளைப்பற்றி அது தொடர்பாக விசாரணை செய்த இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் சாட்சியமளிக்க விருந்தபோதும் கடந்த 5 தவணைகளாக அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை.

இவ்வழக்கு மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் எடுக்கப்பட்ட சமயம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் சாட்சிகளான பொலிசார் ஆஜராகாமையால் வழக்கின் விசாரணை தாமதமடைகிறது 5 தவணைகளாக சமூகமளிக்காத பொலிசார் இனியும் வருவார்களா? என எதிர்பார்க்க முடியாது. வழக்குவிசாரணை தாமதமடைவதால் அரசாங்க ஊழியராக விருந்து தற்காலிகவேலை நீக்கத்திற்குள்ளாகியுள்ள எதிரி பெரிதும் பாதிக்கப்படுகிறார். ஆகவே எதிரியை விடுதலை செய்யவேண்டும் என வாதிட்டார்.

[5-ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபை வரவு - செவுத் திட்டம் - 1983

1980ம் ஆண்டு 35ம் இலக்க அபிவிருத்திச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 40 (பி) பிரிவிற்கமைய யாழ்ப்பாணம் அபிவிருத்திச்சபையின் மேற்படி வரவு செலவுத் திட்டம் 10-12-82 தொடக்கம் ஏழு நாட்களுக்கு பொது மக்களின் பார்வைக்காக அபிவிருத்திச் சபை தலைமையலுவலகத்தில் வைக்கப்படும் என்பதை அறியத்தருகிறேன்.

சு. நடராசா
தலைவர்,
யாழ்ப்பாணம்
அபிவிருத்திச்சபை.
1982 12 08. 5434

## ஈராண்டு நினைவஞ்சலி

திரு. சின்னப்பு சுப்பிரமணியம்
(அதிபர்)
(வேரப்பிட்டி, சங்கானை, கோண்டாவில், பலாலி)



மலர்வு: 1922-12-03 உதிர்வு: 1980-12-11

ஆண்டு இரண்டு கடந்தாலும் எம் நெஞ்சை விட்டகலாத அன்புத்தெய்வத்தை நினைவு கூரும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

'பிரபை மகால்'', உரும்பிராய். (5426)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றத்தில்

மானிப்பாய் அதிகாரி செல்லமுத்து அவெனியூவில் வசித்த காலஞ்சென்ற சரவணமுத்து சோமசுந்தரம் அவர்களின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களினதும் உடமைப் பொருட்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணதத்துவ வழக்கு
இல. த/3529

மானிப்பாய், அதிகாரி செல்லமுத்து அவெனியூவில் வசிக்கும் சோமசுந்தரம் கைம்பெண் இராசலக்ஷ்மி.

மனுதார்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட தத்துவ வழக்கு மேலே குறிக்கப்பட்ட இறந்து போனவரின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள் மற்றும் சொத்துக்கள் ஆகியவற்றை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம்ஆண்டுசித்திரை மாதம் 3-ந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றஆணைப்படி
பொ. சின்னத்துரை,
பதிவாளர்.

1981-ம் ஆண்டு பங்குனி மாதம் 10-ந் திகதி.

12-11-1982

தவணை 17-12-1982 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றஆணைப்படி
தா. குலஞானம்,
பதிவாளர்.

வரைந்தவர்
ச. செல்வராசா,
மனுதாரின் சட்டத்தரணி.
[5430]


# யாழ். நகரில்....

# கிறிஸ்மஸ்-புதுவருடத்திற்கு

இறக்குமதி செய்யப்பட்ட

★ சோடினைப் பொருட்கள்
★ விளையாட்டுச் சாமான்கள்

எண்ணம்போல் வண்ணத் தெரிவுக்கு

# பிரவுண்சன் ரேட் சென்ரர்

பன்முகக் கூட்டுறவுக் கட்டடம்
கே. கே. எஸ் வீதி, :-: யாழ்ப்பாணம்.

ஸேசோச்சோமீது

# தென்னுபிரிக்காத் தாக்குதல்

## ஐ.நா. சாசனத்தை மீறியதாகும்

நியூயோர்க், டிச. 10

''தென்னுபிரிக்கப் படைகள் ஸேசோச்சே அரசுமீது மேற்கொண்டுள்ள திடீர்தாக்குதல் ஊடுருவல் ஐக்கியநாடுகளின் சாசனத்தை மீறிய செயலாகும் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உறுப்பினர் நாட்டில் தென்னுபிரிக்கா மேற்கொண்டுள்ள ஆக்கிரமிப்பு நடவடிக்கை இதுவாகும்.''

இவ்வாறு ஐ நா. சபையின் பொதுச் செயலளர் தென்னுபிரிக்கப் படைகளின் தாக்குதல் ஊடுருவல் மேற்கொள்ளப்பட்டுள்ள ஸேசோச்சோ அரசின் ஐ. நா. சபைப்பிரதிநிதியிடம் கையளித்துள்ள அறிக்கையில் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தென்னுபிரிக்கப் படைகள் கடந்த இருதினங்களுக்கு முன் ஸேசோச்சோ அரசின் மீது திடீர் தாக்குதல் ஊடுருவல்களை மேற்கொண்டு மக்கள் வாழும் பகுதிகளில் படுகொலைகளை மேற்கொண்டுள்ளனர். ஐந்து விமானங்களில் தென்னுபிரிக்கப்படைகள் ஊடுருவலை நடாத்தி மக்கள்வாழும் வீடுகளுக்கு முதலில் கைக்குண்டுகளை வீசினர்கள்.

குண்டுவீச்சினுல் மக்கள் சிதறி ஓடுபொழுது அப்பாவி மக்களை துப்பாக்கிகளால் சுட்டு வீழ்த்தினர்கள் பெண்கள், சிறுவர் உட்பட பலர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மக்களின் குடியிருப்புகள் குண்டுவீச்சினுல் முற்றுக தரைமட்டமாகின.

ஆபிரிக்கத் தேசிய விடுதலை இயக்கத்தினரை அழிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் என்று கூறித்தென்னுபிரிக்கப் படைகள் ஸேசோச்சோ அரசின் அப்பாவிமக்களைப் படுகொலை செய்துள்ள இச்சம்பத்தை ஐ. நாடுகள் சபையின் பாதுகாப்புச்சபையில் ஆராய்வதற்கு ஐ நா சபையின் பொதுச் செயலாளர் இன்று அறிக்கை தாக்குதல்செய்துள்ளார்.

3ம் மண்டலநாடுகளும், கம்யூனிஸ்ட் நாடுகளும் தென்னுபிரிக்கப் படைகளின் ஸேசோச்சோ அரசின் படுகொலைச்செயல்களைக் கண்டித்து அறிக்கைவெளியிட்டுள்ளன. (உ)

---

# ''எழுத்தாளர்கள் சமூகஆக்கச் சிந்தனைகளை உருவாக்கவேண்டும்''

### தமிழக ஆளுநர் கூறுகிருர்

சென்னை, டிச. 10

'எழுத்தாளர்கள் தேசிய ஒற்றுமையைப் பேணுவதிலும், சமூக ஆக்கச் சிந்தனைகளை உருவாக்குவதிலும் முக்கிய பங்கு கொண்டவர்கள். எழுத்து நெறிக்கொள்கைக்கு அமைய எழுதிக்கொள்வது அவசியமாகும். நெறிக்கோட்பாடுகளுக்கு உட்பட்டு எழுதுவதன் மூலமே தமது எழுத்தாற்றலால் தேசியப் பங்களிப்பைச் செய்தவர்களாவார்கள்.'

சென்னையில் நடைபெற்ற பாரத நூலாசிரியர்கள் ஒன்றியத்தின் 9வது மகாநாட்டில் சிறப்புரை ஆற்றிய தமிழக மாநில ஆளுநர் திரு எஸ். எல். குராணு இவ்வாறு தமது உரையில் கூறினுர்.

பாரத நூலாசிரியர்கள் ஒன்றியத் தலைவர் தலைமையில் நடைபெற்ற 9 வது மகாநாட்டில் மேலும் மாநில ஆளுநர் திரு. குராணு கூறியதாவது;

''நூல்களின் தரக்குறைவுக்கு காரணமானவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய எழுத்தாளர் சுயநெறிக் கோட்பாடுகளும், அரசின் சட்டங்களும் அவசியமாகும்'' என்றும் கூறினுர். (உ)

---


# விற்பனைக்கு

- வட்டவாள் — 6 அங். இருந்து 48 அங். வரை — ரூ. 99/-க்கு மேல்
- ஸ்ரெயின்லெஸ் ஸ்ரீல் சிங்க் (STAINLESS STEEL SINK) சகல அளவுகளிலும் — ரூ 950/-க்குமேல்
- போர்சலின் சிங்க் (சைனு) (PORCELIN SINK–VICTORY) — ரூ. 650-00
- கதவுப் பூட்டுகள் (DOOR LOCKS: UNION, VIRO, CHINESE) — ரூ. 100/-க்குமேல்
- லோ லெவல் சூட்ஸ் ENGLISH [LOW LEVEL SUITES COMPLETE SET TWYFORDS] — ரூ. 2550/-க்கு மேல்
- வாஷ் பேசின் மட்டும்: VICTORY — ரூ. 500-00
  - ARMITAGE SHANK — ரூ. 715-00
  - TWYFORDS — ரூ 840-00
- கை வாள் சகல அளவுகளிலும் — ரூ. 40/-க்கு மேல்

மேலும் உங்களுக்குத் தேவையான கல்வனேஸ்ட் இணைப்புக்களுக்கும், இரும்புக் கம்பிகள் பட்டங்களுக்கும், இரும்புத் தகடுகளுக்கும், கட்டடப் பொருட்களுக்கும் குறைந்தவிலையில் பெற நாடவேண்டிய ஸ்தாபனம்

# மஸ்கன்ஸ் லிமிட்.

35, ஸ்ரான்லி வீதி :: :: யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24221.


---

# பாலஸ்தீனியர்களை அகற்றும் நடவடிக்கையில் இஸ்ரேல்

லண்டன், டிச 10

''எமதுநிலங்களைக் கைப்பற்றிய நாள் தொட்டு, இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனியர்களை அகற்றுவதில் எந்தவித தயக்கமுமின்றி ஈடுபட்டுள்ளனர்.'' இவ்வாறு ஜோர்தான் நதியின் மேற்குக் கரையில் உள்ள நப்லஸ் பல்கலைக்கழகத்தின் தலைவரான திரு முன்துர் சலாஹ் இங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாடொன்றில் தெரிவித்தார் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:

''இஸ்ரேலியர்கள் எமது நிலத்தை அபகரித்து. அதில் யூதக் குடியேற்றங்களை ஏற்படுத்திவருகிருர்கள் பாலஸ்தீன மண்ணைப் பூரணமாக ஆக்கிரமிக்கவே பாலஸ்தீன மக்களைப் படுகொலை செய்கிருர்கள். பாலஸ்தீன மக்கள் பல ஆண்டுகளாக உருவாக்கிய ஸ்தாபனங்களையும், நிறுவனங்களையும் அழித்தொழிக்க ஆக்கிரமிப்பாளர்கள் விரிவான திட்டம் போட்டு செயல்படுகின்றனர்.

''மேயர்களை பதவியிலிருந்து விலக்கி, அவர்கள்மீது விசாரணை நடாத்துகின்றனர். முனிசிபல் சபை ஊழியர்களை வேலை நீக்கியும், முனிசிப்பல் சபைகளைக் கலைத்தும்விடுகிருர்கள். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பேராசிரியர்களை, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தைக் கண்டிக்குமாறு இஸ்ரேலிய ஆட்சியாளர் நிர்ப்பந்திக்கின்றனர். இதனை மறுப்பவர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டு நாடு கடத்தப்படுகிருர்கள்

இதுவரை இப்படி 120 பேர் நாடு கடத்தப்பட்டுளளனர். இவர்களில் 25 பேர் விரிவுரையாளர்கள். நப்லஸ் பல்கலைக்கழகத்தின் தலைவரும், துணைத் தலைவரும் இதில் அடங்குவார்கள். பின் ஸியத் பல்கலைக்கழகத்தின் 13 விரிவுரையாளர்களுக்கு நாட்டைவிட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. [உ]

---

வட இந்தியாவில்

# இிரிக்கெட் இரசிகர்கள் மீது பொலிஸார் தடியடி!

புதுடில்லி, டிச. 10

வடஇந்திய நகரான அமிர்தஸாஸில் சுமார் எண்ணூபிரதுக்கும் அதிகமான கிரிக்கெட் இரசிகர்கள் பொலிஸாரின் தடியடித் தாக்குதலுக்குள்ளானுர்கள்.

இத்தாக்குதலினுல் காயம் அடைந்தவர்கள் தொகை எவ்வளவென உடனடியாகத் தெரியவில்லை. ஆனுல் பலர் இரத்தம் சிந்திய நிலையில் இருந்ததைக் கண்டதாக பத்திரிகை நிருபர்கள் தெரிவித்தனர்.

பாகிஸ்தானில் ஆரம்பமாகவிருக்கும் இந்திய – பாக் டெஸ்ட்பந்தயத்தைப்பார்வையிடச் செல்வதற்கு 'விசா' பெறுவதற்காக அமிர்தஸரஸில் உள்ள 'விசா' வழங்கும் காரியாலயத்தில் நீண்ட கியூ வரிசையில்நின்றோரே பொலிஸ தாக்குதலுக்குள்ளானவர்கள்.

இவர்கள் இக்காரியாலயத்தில் 'விசா' வழங்குவதில் தாமதம் காணப்பட்டதையடுத்து இதன் வாயில் கதவுகளைத் தாக்கியும், கட்டிடத்துக்குச் சேதம் விளைவித்தும் ரகளை செய்யலானுர்கள். இதனைத் தொடர்ந்தே பொலிசார் தடியடிப் பிரயோகத்தில் இறங்கி கலகக்காரரை அடக்கத் தொடங்கினர்.

குழப்பம் நடைபெற்றதினத்தில் மட்டும், நண்பகல்வரை பாக் செல்ல சுமார் 1000 'விசா'க்கள் வழங்கப்பட்டன என்று இக்காரியாலயம் தெரிவித்தது. (கி)

---

# பூமியை வலம்வரும் செயற்கைக்கோள்

மாஸ்கோ, டிச. 10

சல்யூட்-7, சல்யூட் – டி 7, பிராகரஸ் 16'' எனும் விண்வெளி நிலையக்கூட்டு அமைப்பு ''இஸ்க்ரா–3'' என்ற சிறு செயற்கைக்கோளைச் செலுத்தியுள்ளது. இச் செயற்கைக்கோள் தற்பொழுது பூமியை வலம்வந்து கொண்டிருக்கின்றது. ''இஸ்க்ரா–1'' ''இஸ்க்ரா–2'' செயற்கைக்கோள்கள் துவக்கிய வானெலித் தகவல் தொடர்பு சோதனைகளைத் தொடர்ந்து நடந்த இந்தச் செயற்கைகோள் பயன்படும்.

இந்தச்செயற்கைக் கோளைச் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை, சோவியத் விண்வெளி நிலையக்கூட்டு அமை பின் விண்வெளி வீரர்களான திரு பெரெசோவாயும், திரு. லெபதேவும் செய்தனர்.

'இஸ்க்ரா–3' செயற்கைக் கோள் பூமியை வலம் வந்து கொண்டு தன்பணியை ஒழுங்காகச் செய்துவருகிறதுஎனஅறிவிக்கப்படுகிறது.

மாஸ்கோவில் உள்ள மாணவர் வடிவமைப்பு நிறுவனமே ''இஸ்க்ரா – 3'' செயற்கைக் கோளை வடிவமைத்தது. [உ]

---

### பாரத - பாக். கிரிக்கெட் 6வது டெஸ்ட்

லாகூர், டிச. 10

பாரதத்துக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே இடம்பெறவுள்ள 6வது தொடரின் 6 டெஸ்ட் கிரிக்கட் போட்டிகளின் முதலாவது கிரிக்கட்டெஸ்ட்போட்டி இன்றுலாகூரில் ஆரம்பித்தது. [உ]

---

### சர்வதேச விருது

லண்டன், டிச, 10

3வது மண்டல நாடுகளின் அபிவிருத்திக்கு உதவியமைக்காக பிலிப்பைபின்ஸிலுள்ள, சர்வதேச அரிசி ஆய்வு நிறுவனத்திற்குச் சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷில் இயங்கும்சமூக, பொருளாதார நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ள இச் சர்வதேசவிருது ஒரு லட்சம் அமெரிக்க டாலர் பெறுமதயுடைய ரொக்கப்பரிசாகும்.

பிலிப்பைன்ஸிலுள்ள சர்வதேச அரிசி ஆய்வு நிறுவனம் கடந்த காலங்களில் 3வது மண்டல நாடுகளின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் பல வெற்றிகரமான ஆய்வுகளை நடாத்தி அவை பலன் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் என்றுவிருதுவழங்கிய நிறுவனத் தலைவர் கூறினுர். [உ]

## மணிவாக்கு

"பரிபூரண விருப்பத்துடன் தியானம் செய், சோர்வும் அதைரியமும் விளைவிக்கத் தக்க எண்ணங்களுக்கு இடம் கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல் உனக்குள்ளிருந்து அறிவும் தீரத்தன்மையும் சக்தியும் மேன்மேலும் பொங்கிவரும்"

— மகாகவி சுப்பிரமணிய பாரதி.

# நமது நோக்கு

## மகாகவி சுப்பிரமணிய பாரதி

இந்த நூற்றாண்டில் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்துக்கும் தனது அமரத்துவமான கவிதைகளால் பெருமை சேர்த்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

"திறமான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்" எனப் பாடிய அப் புலவனின் திறமை இன்று எல்லா நாடுகளிலும் பரவி பாராட்டப்படுகின்றது.

சக்தியிழந்து- சோர்வுற்று தாழ்ந்த நிலையில் கிடந்த பாரத தேசத்தைத் தட்டியெழுப்புதற்கு பாரதியும் அவர்போன்றோரும் உழைத்துக் கொண்டிருந்த வேளையில் வெளிநாடுகளில் இடம் பெற்ற புரட்சி இயக்கங்களையு, போராட்டங்களையும் அறிந்து வரவேற்று இந்திய மக்களுக்கு உணர்வூட்டுவதற்குப் பயன்படுத்தினார் பாரதியார்.

ரஷ்ய நாட்டில் புரட்சி வெடித்து சமதர்ம ஆட்சி மலர்ந்தகாலை, "மாகாளி பராசக்தி ரஷ்ய நாட்டினிற் கடைக்கண் வைத்தாள் அங்கே, ஆகாவென்றெழுந்தது பார் யுகப் புரட்சி" என புகழ்ந்துபாடி இந்திய மக்களுக்கு எழுச்சியூட்டினார்.

தமிழ் இனத்தவர்கள் தமக்கென நாடு இன்றி அந்நிய நாடுகளில் அவதியுறுவதை எண்ணிக் கலங்கிய பாரதி; "ஆப்பிரிக்கத்து காபிரி நாட்டிலும், தென்முனையடுத்த தீவுகள் பலவினும், பூமிப்பந்தின் கீழ் புறத்துள்ள பற்பலத் தீவிலும் பரவி இவ்வெளிய தமிழச்சாதி தடியுதையுண்டும் காலுதையுண்டும் சயிற்றடியுண்டும், வருந்திடுஞ் செய்தியும், மாய்ந்திடுஞ் செய்தியும் பெண்டிரை மிலேச்சர் பிரித்திடல் பொறுது செத்திடுஞ் செய்தியும்..." கேட்டு "விதியே விதியே தமிழச் சாதியை என் செய நினைத்தாய்எனக் குரையாயோ" எனப் புலம்பலானார்.

இனத்தின், மொழியின், சமயத்தின் பெருமை உணராது அவைகளின் உயர்வுக்கு உழைக்காது "பாமரராய் விலங்குகளாய் நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்" என்று தமிழ் மக்களைச் சாடிய அப்பெருமகன், சுதந்திர வேட்கை தணியும் அறிகுறி தென்பட்ட வேளையில் மனமிக வருந்தி இறைவனை நினைந்து உருகிப் பாடியுள்ள பாடல் உயிரற்ற சடலத்துக்கும் உணர்வினை ஊட்டக் கூடியதாகும்.

"ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்த பின்னர் வாராது போல் வந்த மாமணியைத் தோற்போமோ, மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதவும் நூலோர்கள் செக்கடியில் நோவதுவும் காண்கிலையோ, மாதரையும் மக்களையும் வன்கண்மையாற் பிரிந்து காதலினைஞர் கருத் தழிதல் காணுயோ" என அப்பாடல் அமைகிறது. சுதந்திரதாகம் கொண்ட பாரததேசம் உணர்ச்சிப்பிழம்பாகஎழுச்சியுற்று ஏகாதிபத்தியத்துக்கு எதிராக வீறுடன் அறப்போர் தொடுத்திட்ட வேளையில் அந்தத் தியாக வேள்வியில் தமிழ்நாட்டு மக்களையும் ஆவேசத்துடன் இறங்கி செயல்படத் தூண்டிய பெருமை பாரதிக்குரியது.

பாரதியை வெறும் விடுதலை கவியாக – உணர்ச்சிக் கவியாக மட்டும் ஒதுக்கிவிடமுடியாது. அவரது தெய்வீகபாடல்கள், குழந்தைகளுக்காகப் பாடியவை, தத்துவப் பாடல்கள், மற்றும் தனிப்பாடல்கள்யாவும் பெருமையுடன் போற்றப்படுவன.

கண்ணபிரானை பலகோணங்களில் தரிசித்து அவர் பாடியதுபோல் வேறெந்தப் பாடகனும் பாடியிருப்பதாகத் தெரியவில்லை. 'எங்கிருந்தோ வந்தான்' என்று தொடங்கும் பாடல் படிப்பவர்களைப் பரவசத்தில் ஆழ்த்துவதாகும். அன்பும் அறமும் கொண்டு வாழ்பவர் மத்தியில் ஆண்டவன் சேவகனுக வந்தும் துணைபுரிவான் என்பதை இப்பாடல் குறிப்பதாகும்.

வீழ்ந்துபட்டுக் கிடந்த ஒரு சமுதாயத்தைத் தன் பாட்டு மூலம் தலை நிமிரவுகொள்ளச்செய்த அப்பெருமகன் வாழ்நாள் முழுவதுமே வறுமையில் வாட நேர்ந்தபோதிலும் தனது நேர்மைக்கும், பெருமைக்கும், பேராசையற்ற தன்மைக்கும் ஏற்பட்ட சோதனைகளையெல்லாம் துச்சமாகத் தூக்கிஎறிந்து எவரிடமும் கைநீட்டி பல்லிளித்து யாசியாமல் தலைநிமிர்ந்து வாழ்ந்துகாட்டியது இன்றைய நம் சமுதாயத்துக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இவ்வுலகில் 39 வருடங்களும்கூட முழுமையாக வாழவில்லை. ஆனால் அந்தக் குறுகிய வயதில் அவர் இலக்கியத்துறைக்கும், அதன் மூலம் மனிதசமுதாயத்துக்கும் ஆற்றிய சேவை அளப்பரியது. இன்றுடன் பாரதி நூற்றுண்டு முற்றுப்பெற்றுலும், அவரது சிந்தனைகளும், பாடல்களும் நிலைத்து நின்று பயன்தரும் என்பதில் சந்தேகமில்லை.

### புதிய பஸ் சேவை

(கரவெட்டி)

கிழக்குப் பிராந்திய போக்குவரத்துச் சபை அச்சுவேலியில் இருந்து திருகோணமலைவரை புதிய பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது.

திருகோணமலை சாலையினுல் ஆரம்பிக்கப்பட்டுள்ள இப்பஸ் சேவையில் ஈடுபடும்பஸ்வண்டி தினசரி அதிகாலை 4-30 மணிக்கு அச்சுவேலியில் இருந்து புறப்பட்டு பருத்தித்துறை, நெல்லியடி ஊடாகச் சென்று நண்பகல் 12-15 மணிக்கு திருகோணமலையை அடையும்.

திரும்பவும் நண்பகல் 1-15 ற்கு திருகோணமலையில் இருந்து புறப்படும் இந்த பஸ் இரவு 8 மணிக்குஅச்சுவேலியை அடையும்.

---

மகாகவி சுப்பிரமணிய பாரதி நூற்றுண்டு சிறப்பிதழ்

# மனுக்குலத்தை உய்விக்க வந்துதித்த மகாகவி



சூ. யோ. பற்றிமாகரன்

"பெருங் கவிஞராகப் பரிணமிப்பவர்கள் மொழியாற்றல் முதலியவற்றைக் குறைவின்றிப் பெற்றிருக்கும் அதே வேளையில், தாம் வாழும் காலத்துச் சமுதாயத்தின் அடிப்படைப் பிரச்னைகளை அறிந்து அவற்றுக்குப் பரிகாரம் காண முற்படுபவர்களாகவும் இருக்கின்றனர். தத்தம் அனுபவங்களின் துணைகொண்டு கவி பாடத் துவங்கும் பலர் அவ் அனுபவங்களின் மட்டத்திலேயே தங்கிவிடுகின்றனர். ஆனால் பெருங்கவிஞன் தன் சொந்த அனுபவங்களை மாத்திரம் பொருளாகக்கொள்ளாது, மனுக்குலத்தின் நிலைமையினை உணர்ந்து அதனோடு தான் கலந்து எழுதுகிறுன்" என்பது பேராசிரியர் கைலாசபதியின் எழுத்து. இவ்வெழுத்துக்கு உதாரணமாக நிற்பவன் பாரதி. பாரதி தான் வாழ்ந்த சமுதாயத்தோடு கலந்து எழுந்தான், சமுதாயச் சத்தாகத் தான் மாறினுன். விஜயபாரதி கூறுவதுபோல "பாரதி பிறவிக்கவிஞன் ஏனெனில் அவன் கவிதை எழுதவில்லை. கவிதையையே வாழ்வாகக்கொண்டு வாழ்ந்தான். அதனுலேயே அவன் எழுதியதெல்லாம் கவிதையாகியது" ஆகவே பாரதிக்கு அனுபவக் கூர்மையைக் கொடுத்த அவன் வாழ்ந்த காலத்துச் சமுதாய நிலையை ஊடுருவிப் பார்த்தால் மட்டுமே பாரதியின் படைப்புகளின் தேவையை நன்குபுரிந்து கொள்ளலாம்.

முழுச் சமூகத்தினதும் சமூக கலாச்சாரம் உயர் சமூகத்தினரால் அடிமைகொள்ளப்பட்டிருந்தது. எனவே பாரதி அந்நியரை வெளியேற்றும் கைங்கரியத்தை சாதிப்பதற்கு மட்டும் கங்கணம் கட்டிநிற்கவில்லை. ஒரு முழுமையான பொருளாதார – அரசியல் – சமூக விடுதலையை வேண்டிநின்றுன். பாரதியின் மனுநிலை மனிதத்துவத்தின் எழுச்சி என்ற பரப்பிலேவிரிந்தஒன்று தன்னைக் கட்டினுன் தன் னடக்கத்திற்கு. அவனுக்கு ஆன்மீகப் பலம் துணையாகியது பிறர் துயர்தீர்க்கஉழைத்தான். பிறர் நல வேண்டினுன் உலகெலாங்காக்கும் ஒருவனைப் போற்றினுன். உரிமை என்றுல் "ஒரு மனிதன் தன் முழுஆளுமையையும் பயன்படுத்தும் தன்மை" எனப்படும். "ஒரு மனிதன் தன் முழு ஆளுமையையும் பயன்படுத்தி வாழும் சூழ்நிலை நிலவினுல் அச்சமுதாயத்தில் சுதந்திரம் நிலவுகிறது" எனப்படும். ஆனுல் பாரதி வாழ்ந்த காலத்தில்அந்நியஆட்சியாளராலும், நிலமானிய அமைப்பாலும் மனச்சிந்தனை மழுங்கலாலும் சுதந்திரம் பறிக்கப்பட்டிருந்தது. உரிமை மறுக்கப்பட்டிருந்தது. எனவே பாரதியின் கவிதா அம்புகளுக்கு அந்நியர் ஆட்சியும்–நிலமானிய அமைப்பும்–சிந்தனைமழுங்கலும் இலக்காகிநின்றன. ஆனுல் இரையானவை என்று கூறமுடியாது. ஏனெனில் பாரதியின் மண் நிலமானியத்தின் இறுக்கமான பிடிக்குள் சிக்கிஇருந்தது 1446 சதுர மைல் பரப்புடைய திருநெல்வேலிப் பயிர்ச் செய்கை நிலம் 19 நிலப் பிரபுக்களிடை பகிரப்பட்டிருந்தது. இவர்களே ஜமீந்தார்கள் என அழைக்கப்பட்டனர். இவர்களுள் 28,781 பவுண் வரிகட்டும் குட்டி ராஜதானியாக பாரதியின் எட்டயபுர சமஸ்

(8-ம் பக்கம் பார்க்க)

## பாரதியார் யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பார்த்தால்...!

[1] வீதி தோறுங் கல்லூரி! பேஷ்! பேஷ்! இந்த
வித்தைமலி நகரமடா சுவர்க்கம் என்பார்!
பாதி வழி நடந்திடுவார், படிக்கும் பாலர்,!
பாவையர்கள்! காளையர்தம் பாண்மை கண்டே
ஓதுவது ஒழியாத மாந்தர் கூட்டம்
உருவாகும் ஒரு நகரம் இதுவே என்பார்!
ஆதியந்தம் இல்லாத ஈசன் கோவில்
அடுக்கடுக்காய்க் கண்டதுமே அதிசயிப்பார்!

●

[2] பண்ணிசைகள் கேட்டுருகிப் பாடிப்பாடி
பழைய தமிழ் நகரமடா! என்றே நிற்பார்!
எண்ணரிய கோவில்கள் தாம் ஏனே என்றும்
எண்ணிடுவார்? உள்நடப்பை எட்டிப்பார்ப்பார்!
கண்ணியமாய் உடையுடுத்துக் காட்சி பார்க்கும்
கன்னியரைக் காளையரைக்கண்டு கொண்டே
மண் விழுந்து போன மதம் மாறவில்லை!
மாற்றமில்லை! வேடிக்கை நன்றே என்பார்!

●

[3] கோவில்களில் வேடிக்கை கூடிப்போச்சு!
குற்றமடா! குற்றமடா! என்றே கூறித்
தேவிபதம் சிந்திக்கும் வழிகள் சொல்வார்!
திருந்தவழி உரைத்திடுவார்! சேர்ந்துபாடி
ஆவியொன்றி உளங்கரையும் வழிகள் காட்டி
அன்போடும் திருத்தலங்கள் கூறிக்கூறிப்
பாவியர்க்கும் பரமனருள் கிடைக்குமென்றே
பண்போடும் பத்திநெறி பான்மை சொல்வார்!

●

[4] தீண்டாமைப்பேய் பிடித்த சிலரைக் காண்பார்
திகைத்திடுவார்! பதைத்திடுவார்சீற்றங்கொள்வார்!
வேண்டாத இவ்வழக்கம் வேண்டாம் என்றே
வீறுடனே பேசிடுவார்! விண்ணும் எட்ட
"ஆண்டவனர் சந்நிதியில் வேறுபாடாக?
ஆ! கொடுமை! அகற்றிடுவோம் இன்றேயென்று
வேண்டிடுவார்! மிகுகுரலும் எழுப்பி அந்த
வெய்யவர்தம் பாதத்தில் வீழ்ந்துங் கேட்பார்!

●

[5] உடலுழைப்பால் உயருமக்கள் கூட்டங்கண்டே
ஓயாது தொழிற் சிறப்பை உன்னிப்பார்ப்பார்!
படைகண்டும் அஞ்சாத மக்கள் உள்ளப்
பாங்குணர்ந்து மகிழ்ந்திடுவார்! அன்பேயின்றிக்
கடையுடைத்தும் வீடுடைத்தும் களவுகொள்ளும்
கயவர் செயல் கேட்டதுமே கதறிநிற்பார்!
நடையுடை பாவனைகளெல்லாம் வளர்ந்த நாட்டின்
"நயத்தக்க நாகரிகம்" நன்றே என்பார்!

●

[6] வினைவேறு சொல்வேறு பட்டார் கூட்டம்
வேகுவிக்கும் பாரதியின் நெஞ்சந்தன்னை!
நினைவு நன்றேல் வாழ்வு நன்றும் என்றே கூறும்
நீதிநிலை யுணர்ந்திடுவீர் மக்கள் என்பார்!
அனைவருக்கும் சமநீதி உரைப்பார் அச்சம்
அணுவளவும் நெஞ்சிலில்லாங் கவிஞனன்றோ!
தினையளவு தருமத்தை உணர்ந்து கொண்டால்
தேசமெலாம் வாழ்ந்திடுமே சிந்திப்போமே!

ஆக்கம்:–

வித்துவான் சி. ஆறுமுகம்

## இன்று ஹன்டி பேரின்பநாயகம் அவர்களின் ஐந்தாவது நினைவு தினம்



## நிலைபிரியா நெறியாளன்

உத்தமராம் காந்தியினை உயர் ஞானி
டால்ஸ்டாயை உளத்தே போற்றி
மெத்தவுமே எளிமையொடு நேர்மைஉழைப்
பென்பவற்றை மேவிக் கொண்டோன்!
இத்தரையை ஈடேற்றும் இனியதுவாம்
சித்தனையே மனத்தே கொண்டோன்!
வித்தகர்க்கு வித்தகனாய் விளங்கிவந்த
ஹன்டி என உலகம் கூறும்!

★

பாங்கமைந்த இவ் வையம் முழுவதுமே
பெறவரினும் கொள்கை தன்னில்
நீங்குதலை விரும்பாத நெறியாளன்!
கற்றவர்தம் நெஞ்சில் உள்ளான்!
ஆங்கிலமாம் மொழியதனில் அளப்பரிய
ஆற்றலினன் எனினும் எங்கள்
தீங்கரும்பாம் தமிழினையும் தெய்வமெனப்
போற்றுகின்ற பண்பே கொண்டோன்!

★

மாணவராம் வண்டனைத்தும் வந்துண்ணும்
மலராவான் பண்பாம் ஆரம்
பூணுமொரு பெருந் தோளான்கற்றபடி
நின்றிட்ட புனிதன் ஆவான்!
பேணுமுயர் இலங்கியமாம் கனி பிழிந்து
பேசசாகி வழங்கும் வல்லோன்!
நீணிலத்தின் தவமாகி நீதியினை மறவாத
நெஞ்சம் கொண்டோன்!

-ம. பார்வதிநாதசிவம்

## பெண்ணுக்காக முடிதுறந்த மாமன்னன் பெருநாள்

46 ஆண்டுகளுக்கு முன் டிசம்பர் 11ம் தேதி 1936 அகில உலகமுமே அதிர்ச்சியடைந்த செய்தி ஆங்கில மன்னன் எட்வாட் VIII தாம் காதலித்து வந்த பெண்ணுக்காக முடிதுறந்தது கேட்போர்களின் மனத்தை உருக்குமளவில் அன்றிரவு அவர் பி.பி.சி வானொலியில் நிகழ்த்திய சிற்றுரை ஆங்கில இலக்கியத்தில் ஒரு பேருரையாக மதிக்கப் பட்டு வருகிறது.

தம்முடைய மன்னர் பதவியை தமது தம்பியார் பின்பு ஜோர்ஜ் VI கையில் ஒப்படைத்து அன்றிரவே பிரான்ஸ்தேசதத்துக்கு மிக அமைதியாக நழுவிவிட்டார்.

மன்னராயிருந்த குறுகிய காலத்தில் மக்களின் பெருவிருப்பை பெற்ற எட்வாட், அப்பதவியில் தொடர்ந்திருந்தால் முடியாட்சியை ஒழித்து இங்கிலாந்தை ஒரு குடியாட்சியாக்கும் பணியில் முன்நின்றிருப்பார் என்று அக்காலத்தில் பேசப்பட்டது.

என்றும் தமது தாய்நாடே தமது இதயத்தில் அடிநாதமாகவிருக்குமென்ற வாக்குறுதியை அளித்தமன்னன் தமது அமெரிக்க பெண்மணியான திருமதி சிம்சனுடன் என்றும் குன்றாத காதல் வாழ்க்கையை நடத்தியது குறிப்பிடத்தக்கது.

மன்னன் ஷாஜகான் தனது மனைவியின் காதலை உலகறிய ராஜ்மஹால் என்னும் பளிங்குக் கலலறையை அமைத்தான்.

ஆங்கில மாமன்னன் பிரிட்டிஷ் சாமராச்சியத்தின் முடியையே ஒருபெண்ணின் காதலுக்காகத் துறந்தது அதிலும் மிகப்பெரிய சாதனையாகும்.

## உணவு....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் நீதிபதி திரு. சீ. வி. விக்கினேஸ்வரன் வழக்கை தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்தார்.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்துடன் சட்டத்தரணி செல்வி மாலினி இராஜரத்தினமும் ஆஜரானார். காங்கேசன்துறை பொலிசார் வழக்கை நடத்தினர்.

## வானொலியில் குமார்

[கொழும்பு]

தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு குமார் இம் மாதம் 17 ம் தேதி இரவு 9–30முதல் 9-45 வரை வானொலியில் உரை நிகழ்த்துவார். [க]

## யாருடைய மூக்குக்கண்ணாடி

யாழ்- நாவலர் வீதியைச் சேர்ந்த திரு. ச. இராசகோபால் என்பவர் விக்ரோறியா வீதியில் மூக்குக் கண்ணாடி ஒன்றைக் கண்டெடுத்து ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைத்துள்ளார் உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டி காரியாலய நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## பாரதியாரின் தமிழ்த் தவிப்பு

(சாரதா)

புதுமைக் கவிஞனென்பார் — பெரும்
புரட்சிக் கவிஞனென்பார்,
மதுரக் கவிஞனெனபார் — மறு
மலர்ச்சிக் கவிஞனென்பார்,
பொதுமைக் கவிஞனென்பார் — அருட்
புலமைக் கவிஞனெனபார்
எதுவும் அவற்கிசைவாய்ச் — சொலும்
இனிய புகழ்ப் பெயரே!

கவிபா ரதிநினைவாய் — அவன்
கருத்துப் புரட்சிகளை
புவிக்கு அறிமுகஞ்செய் — திடும்
பொழுதில, மரபுவழிக்
கவிதை கதைவசனம் — புதுக்
களங்கண் டுலகியலிற்
சவிபெற் றிடவுழைத்த — தமிழ்த்
தவிப்பின் நெறிப்படுவோம்!


# பாரிய கட்டடம் கட்டுபவர்களே! சற்று கவனியுங்கள்




நீங்கள் அமைப்பது பாரிய கட்டிடங்களா? அப்படியாயின் அதற் கேற்ற பாரிய பெயின்ற் தேவையன்றோ! இதோ இருக்கவே இருக்கிறது இங்கிலாந்தின் அதிபெரிய பெயின்ற் விநியோகத்தர்களான பிளன்டெல் - பேர்மோகிளேஸ் தாபனத்தின் தயாரிப்புகள்.

பிளன்டெல் - பேர்மோகிளேஸ், தொழிலியல் கட்டிட அமைப்பாளர்களுக்குக் கச்சிதமான விலைகளில் வருகின்றது.

பிளன்டெல்-பேர்மோகிளேஸ் பாவிப்பதனால் உங்கள் சிரமம், நேரம், செலவு யாவும் குறைகின்றன.

கட்டிடக் கலையில் உங்கள் கைவண்ணத்துக்கு முத்தாய்ப்பு அளிக்கிறது பிளன்டெல் - பேர்மோகிளேஸ்.

பமாஸ்டிக் இமல்சன் (வெள்ளையும் நிறங்களும்)
4 லீற்றர் ரூபா. 168/-
1 லீற்றர் ரூபா. 46/-
மேர்மோகிளேஸ் குளொஸ் இனமல் (வெள்ளையும் நிறங்களும்)
4 லீற்றர் ரூபா. 205/-
1 லீற்றர் ரூபா. 56/-
500 மி.லீற்றர் ரூபா. 29/-

உற்பத்தியாளர்களும் சந்தைப்படுத்துவோரும்
டெல்மேஜ் போர்சைத் அன்ட் கம்பனி (பெயின்ற்ஸ்) லிமிட்டெட்.
101, விஜயாலங்கார மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி. 93367, 93361 - 5.

பிளன்டெல் பேர்மோகிளேஸ்
நிபுணர்களின் உறுதுணை

நீர்வேலி வங்கிகொள்ளை கொலைவழக்கு;

# எதிரிகளின் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளலாமா?

## பூர்வாங்க விசாரணைக்கு உத்தரவு

[கொழும்பு]

நீர்வேலி வங்கிக் கொள்ளை, கொலை வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டபோது, எதிரிகள் பொலிஸாருக்குஅளித்த வாக்குமூலங்களை சாட்சியமாக ஏற்றுக் கொள்ளலாமா? என்பது குறித்து பூர்வங்க விசாரணை ஒன்றுக்கு நீதிபதி உத்தரவிட்டார்.

எதிரிகளின்வாக்குமூலங்களை சாட்சியங்களாகஏற்றுக்கொள்ளும் விஷயத்தில், அதனை நிரூபிக்கும் பொறுப்பு எதிர் தரப்பினரிடமா? அல்லது அரசு தரப்பினரிடமா? உள்ளதென்பது குறித்து விசாரணை நடைபெற்றது.

நேற்ற உதவிப் பொலிஸ் அதி ர் சுராம்பதியின் சாட்சியத்தைப் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுனில் டி சில்வா நெறிப்படுத்தினர்.

சாட்சியமளித்த ஏ.எஸ்.பி. சுராம்பதி, எதிரிகளின் வாக்குமூலத்தைத் தான் ஆங்கிலத்தில் பதிவு செய்ததாகக் கூறினர்.

எதிரிகள் ஆட்சேபிக்கவில்லையா? என்று பிரதி சொலிசிஸ்ட்டர்கேட்டபோது அதனை எதிரிகளின் சட்டத்தரணிஎன். சத்தியேந்திரா ஆட்சேபித்தார்.

எதிரிகளின் சாட்சியம் ஏற்றுக்கொள்வதா, இல்லையா என்பது பற்றி முடிவு எடுக்குமுன், அதுபற்றி கேள்வி கேட்டதை ஆட்சேபிப்பதாக சட்டத்தரணி சத்தியேந்திரா கூறினர்.

விசாரணை தொடர்ந்துநடை பெறுகிறது. [இ]

## பொம்மைவெளிக்கு ரூ. 3 லட்சம் ஒதுக்கீடு

### யாழ். எம். பி. நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

பொம்மைவெளிக் குடியேற்றத்திட்டத்தில் பழை நீர் தேங்கி நிற்பதைத்தடுத்து மண்போடவும், வடிகால் அமைக்கவும் யாழ். எம், பி, திரு. வெ. யோகேஸ்வரன் பன்முகப்படுத்தப்பட்ட வரவு–செலவுத்திட்ட மூலம் 3லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளார்.

இக்குடியேற்றத்திட்டத்தில் 184 முஸ்லிம் குடும்பங்கள் குடியமர்த்தப் பட்டிருக்கிறுர்கள்.

இக்குடியேற்றத்திட்டத்தில் வசிப்பவர்ளுக்குகுழாய்மூலம் நீர் வழங்கவும யாழ். எம பி நடவடிக்கை எடுத்துள்ளார். (மா)

## மாவட்டசபை உறுப்பினரின் தாயார்காலமானர்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டசபை உறுப்பினர் திரு. ச. பூபாலசிங்கத்தின் தாயார் திருமதி நாகரத்தினம்மா சங்கரப்பிள்ளை நேற்று வட்டுக்கோட்டையில் காலமானர்.

## 3000புதைகுழிகள் கண்டு பிடிப்பு

ஹனேய், டிச 10

திரு பெல்போர்ட்டின்ஆட்சியின்போது அவரது தீவிரவாத கம்யூனிஸ்டுகளால் படுகொலை செய்யப்பட்டவர்களின் 3000 புதைகுழிகள் கம்பூச்சியாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

வியட்னுமிய அரச செய்தி அறிக்கையின்படி; கம்பூச்சியாவின் தென்மேற்குப் பகுதியில் தீவிரவாதகம்யூனிஸ்டுக்களால் படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டவர்களின் 3000 புதை குழிகள் கண்டுபிடிக்கப் பட்டதாகவும், இப்புதை குழிகள் வியட்னும் – கம்பூச்சியா எல்லைகளுக்கு மிக அண்மையில் தென்மேற்கு கம்பூச்சியாவிலுள்ளதாகவும் கூறுகிறது (உ)

## கடல் பாதுகாப்புச்சட்ட மாநாடு

நியூயோர்க், டிச. 18

இன்று ஜமெக்காவில் முடிவடையும் 'சர்வதேச கடல் பாதுகாப்புச்சட்ட 5 நாள் மாநாட்டை அடுத்து சர்வதேச கடல் பாதுகாப்பு சட்டத்தில் 144நாடுகள் ஒப்பமிட்டுள்ளன.

இச் சட்டத்தின்கீழ் கடல், கடற்படுக்கையிலுள்ள கனிப்பொருள் வளங்களைப்பேணுதலும், பயன்படுத்தலும் பிரதான அம்சமாக எடுக்கப்பட்டுள்ளது. கடற்படுக்கையிலுள்ள கனிப்பொருள்களை எடுத்தலை எதிர்க்கும் ஐக்கிய அமெரிக்கா இச்சட்டததை ஏற்காது மறுத்துள்ளது,

## பாரதி நூற்றுண்டு தபால் முத்திரை

சென்னை. டிச. 10

மகாகவிசுப்பிரமணியபாரதியாரின் நூற்றுண்டு நிறைவு விழாவையொட்டி பாரத்தில் விசேட தபால் முத்திரைகள் இம்மாதம் 17ந் திகதி வெளியிடப்படவுள்ளன.

பாரதியாரின் நூற்றுண்டினை ஓராண்டு விழாவாக கொண்டாடப்பட்டுவந்து, அதனை நிறைவு செய்யும பூர்த்தி விழா எதிர்வரும் வியாழக்கிழமை சென்னையில் நடைபெறுகிறது. (உ)

## இந். காங்கிரஸ் வேட்பாளர் பட்டியல்

புதுடில்லி, டிச 10

அந்திராமாநிலம், கர்நாடக மாநில சட்டசபைகளின் பொதுத்தேர்தலில் போட்டியிடும் ஆளும் இந்திரா காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் பட்டியல்கள் இன்று வெளியிடப்பட்டுள்ளது.

இருமாநிங்களின் சட்டசபைகளில் முன்பு சட்டசபைஉறுப்பினர்களாக இருந்தவர்களில் 60சதவீதமானவர்களும்,புதியவர்களும் இந்திரா காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர். [உ]



## "மறைந்த பேராசிரியர் கைலாசபதி

# தமிழீழப் பெருமையை திக்கெட்டும் பரப்பியவர்"

### பண்டிதர் கா. பொ. இரத்தினம்

(யாழ்ப்பாணம்)

"மறைந்த பேராசிரியர் க. கைலாசபதி, இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலும் தமது அறிவையும் ஆற்றலையும் புகழையும் நிலைநாட்டி தமிழீழப் பெருமையை திக்கெட்டும்பரப்பிய செந்தமிழ் பெருமகனை இழந்து அவரது இடத்தை நிரப்புவதற்கு எங்குமின்றி இன்று நாம் தவிக்கிறோம்"

இவ்வாறு தீவுப்பகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பேராசிரியர் கைலாசபதி மறைவுகுறித்து விடுத்துள்ள இரங்கல் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

"பேராசிரியர் கைலாசபதி அவர்களின் மறைவினை அறிந்து பேரதிர்ச்சியும், பெருமதுன்பமும் அடைந்தேன் யாழ் பல்கலைக்கழகத்தை அணி செய்த பேராசிரியர் ஒருவரின் எதிர்பாராத மறைவு ஈடு செய்யமுடியாத பேரிழப்பாகும். தமிழிலக்கிய உலகிலும் தமிழ் ஆராய்ச்சித்துறையிலும், திறனாய்விலும் ஈடிணையின்றி அயராத முயற்சியிலும் ஓயாத உழைப்பாலும் தமக்கென ஒரு தனி இடத்தைப் பெற்று ஒளிவிட்ட தீபம் இன்று அணைந்துவிட்டது.

பல்லாண்டுகளாக ஈட்டிய அறிவுக்களஞ்சியத்தை இழந்து தமிழ் மக்கள் தமது கண்ணை இழந்தவர்கள்போல் அவலப் படுகிறார்கள்.

அவரது பிரிவால் வருந்துகின்ற அவரது குடும்பத்தினருக்கும், மாணவருக்கும் அன்பர்களுக்கும் எவ்வகையிலும் ஆறுதல் கூறமுடியாது என்றார். [மா]

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக ஊழியர்களும் பேராசிரியர் கைலாசபதியின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.


மனோகரா யாழ். நகர்
தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, 9-30
Land Turner, Ralph Bates in
**Persecution**
(Strictly for Adults

ராஜா யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
பாக்கியராஜ் - சரிதா
மௌனகீதங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஹலோ மிஸ்டர் ஜமீந்தார்
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்) தினசரி 6-30, 9-30 சனி.ஞாயிறு 2-30
கார்த்திக்—ராதா—தியாகராஜன்
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)

சாந்தி (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
5-வது கடைசி வாரம்!
எம். ஜி. ஆர்—லதா
நவரத்தினம்
A.P.N. இன் வண்ணப்படம்

5-வது ஜனத்திரள் வாரம்
றீகல் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன்—ஜெயலலிதா
அசோகன்—நாகேஷ்
நான் (ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜீவ் - ஜோதி
ரயில் பயணங்களில்
(கலர்)

லிடோ [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—ஜெயலலிதா
சவாலேசமாளி

ராணி தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
(யாழ். நகர்) சிவாஜி-உஷா நந்தினி நடித்த
என்னைப்போல் ஒருவன்

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
10—13-12-82
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நாடோடி

ஶ்ரீதர் தினசரி 10-30, 2-00, 4-30, 7-00, 9-30
(யாழ். நகர்)
BRUCE LEE in
THE WAY OF THE DRAGON
த வே ஒவ் த ட்றகன்
Your last chance to see a Karate film......
Your last chance to see a Bruce Lee's film......
கராட்டி படத்தைப் பார்க்கக் கிடைத்திருக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே.........
புரூஸ்லீயின் தீரச் செயல்களை காணக் கிடைக்கும் கடைசிச் சந்தர்ப்பம் இதுவே......


# இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 25ந் திகதி சனிக்கிழமை

(11—12—82)

மேடம்: ஆனந்தமயமான வாழ்க்கை அன்பர்களின் வருகை உங்களை உற்சாகப் படுத்தும். கணவன் மனைவி உறவு முறைகள் மிகவும்நெருக்கமாக இருக்கும். சிலருக்கு திடீர் திருமணமும் நடைபெறலாம்.

இடபம்: நீண்ட நாள் உறவில் முறிவு ஏற்படலாம். கடமையாற்றுமிடத்தில் நிதானத்துடன் நடந்து கொள்ளவும். குடும்பத்திலும் சிறு பூசல்கள் தோன்றிமறையும். நிதானம் வேண்டும்.

மிதுனம்: இலட்சிய இரசனையுடன் இசையிலும் பிரியம் ஏற்படும். அறிஞர்களின் ஆதரவு கிடைக்கும். கலைஞர்கள் போற்றப்படுவார்கள் சிலருக்கு வெளிநாடு செல்லும் சந்தர்ப்பமும் ஏற்படலாம்.

கடகம்: செய் தொழிலில் சிறப்படைவதற்கு இடமுண்டு புதிய கண்டுபிடிப்புக்களும் இடம் பெறும். பொறியியலாளருக்கு சிறப்பான தினம். சிலருக்கு அரசினர் விருந்தும் கிடைக்கலாம்.

சிங்கம்: வணிகத் துறையில் முன்னேற்றம் காணப்படும். நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும். மக்களின் பிரபல்யம் உங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தும்.

கன்னி: பகைவர்கள் பதுங்குவர். பாதையில் தடைகள் உண்டு. நம்பிக்கை மோசடி மூலம் பணமும்பறிபோகலாம். முன்னெச்சரிக்கை நன்று

துலாம்: கழுகுப்பார்வைஉங்களை வட்டமிடும். எடுத்த காரியத்தில் தாமதம் ஏற்படலாம். அடக்கத்துடன் நிதானத்துடனும் நடந்து கொள்வது நன்று

விருச்சிகம்: களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும். உள்ளத்தில் உவகைதுள்ளும் தொழில் புரிவதில் ஆர்வம் காட்டுவீர்கள். கல்வி கற்போர்க்குச் சிறப்பான தினம்.

தனு: குடும்பத்தில்சிறுபூசல்கள் தலைதூக்கும். பெரியவர் ஒருவருடன் அபிப்பிராயபேதம் தோன்றக்கூடும். ஆத்திர உணர்ச்சியால் மோதல்கள் ஏற்படும். அமைதியுடன் இருக்கவும்.

மகரம்: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. தாய் வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு. உயர் கல்வியில் ஈடுபடுபவர்களுக்கு உற்சாக தினம்.

கும்பம்: நடுநிலை தவறுது நல்லதைச் செய்வீர். உங்கள் புத்திக் கூர்மையை மற்றவர்கள் பாராட்டுவார்கள். குடும்பவாழ்க்கை மகிழ்ச்சியை கொடுக்கும். பழைய நண்பரின் சந்திப்புக் கிடைக்கும்.

மீனம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும். மறைமுகமாக நடத்திய காரியம் ஒன்று இன்று அம்பலமாகலாம். சிலருக்கு விரக்தி மனப்பான்மையும் தென்படலாம். பொறுமை நன்று.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## வீடுடைத்து திருட்டு

(மாவிட்டபுரம்)

பூட்டியிருந்த வீடு உடைக்கப்பட்டு 22 ஆயிரம் ரூபாபெறுமதியான தொலைக் காட்சிப் பெட்டி, கஸட் என்பன திருடப்பட்டுள்ளன.

ஊறணியைச் சேர்ந்த அந்தோனிமுத்து ஜெயசீலன் என்பவரது வீட்டிலேயே இத் திருட்டு நடந்துள்ளது.

அவர் வீட்டைப்பூட்டிவிட்டு யாழ்ப்பாணம் சென்று திரும்பிய சமயம் வீடு உடைக்கப்பட்டு, இப்பொருட்கள் திருடப்பட்டிருந்ததாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் தெரிவித்துள்ளார்.

பொலிசார்விசாரணைசெய்து வருகின்றனர்.

## சைக்கிள் திருட்டு: பிணையில் அனுமதி

[மாவிட்டபுரம்]

சைக்கிள் திருட்டு சம்பந்தமாக கைதாகி றிமாண்டிலிருந்த சந்தேகநபர் 1,000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சுன்னாகம் பொலிசார் சைக்கிள் திருட்டு தொடர்பாக தம்பிராசா மகேந்திரன் என்னும் சந்தேக நபரைக் கைது செய்து ஏற்கனவே மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் றிமாண்டில் இவர்வைக்கப்பட்டிருந்தார்.

இந்நபர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவரை தந்தையின் பொறுப்பில் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி. திரு சீ. வி. விக்னேஸ்வரன் மீண்டும் ஜனவரி 18ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.


தவணைமுறையில் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்வனவு செய்து
அதே நாளில் உங்கள் வீட்டில் பொருத்திக்கொள்ள
வீனஸ் றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
சென்னை ரூபவாகினி நிகழ்ச்சிகளைத்
தெளிவாகக் கண்டுகளிக்க உத்தரவாதத்துடன்
'ஏரியல்' (அன்ரனு)
பொருத்திக் கொள்ளவும்.
★ சொனி (Sony)
★ நஷனல் (National)
★ சன்யோ (Sanyo)
★ சிரு (Siera)
மற்றும் இன்னோரன்ன வர்ண-கறுப்பு/வெள்ளை தொலைக்காட்சிப் பெட்டிகளை சகாய விலைக்கு தவணைமுறையில் (F) பினன்ஸ் வசதியுடன் பெற்றுக் கொள்ளவும்.
வீனஸ்
றெக்கோடிங்
றேடியோ வாச் வேக்ஸ்
266/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

காங்கேசன்துறை வீதி சீ பொன்னம்பலம் வீதியிலுள்ள எரிந்த 15 கடைக்கும் பலகை கதவுகள், கூரை புனரமைக்கப்படும் பொதுசன நூலகத்திற்கு இரும்பு கதவு ஆகியன செய்து வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 24-12-82ம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

01. காங்கேசன்துறை வீதி, சீ. பொன்னம்பலம் வீதியிலுள்ள எரிந்த 15 கடைகளுக்கு பலகை கதவுகள் செய்தல்.
02. புனரமைக்கப்படும் பொதுசன நூலகத்திற்கு இரும்பு சுருக்கு கதவு செய்தல்.
03. காங்கேசன்துறை வீதி, சீ. பொன்னம்பலம் வீதியிலுள்ள எரிந்த 15 கடைகளுக்கு கூரை அமைத்தல்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து கேள்வி வைப்புப்பணமாக ரூ. 250/-ம் கேள்விப்படிவக் கட்டணமாக ரூ. 50/-ம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக் கூடிய படிவங்களின் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்.

மாநகராட்சி மன்றம்,
யாழ்ப்பாணம்,
09-12-82. 5436

## வகுப்புகள்

### சென்பீற்றர்ஸ் மெதடிஸ்த சபை

பின்வரும் வகுப்புகளை 1983-ம் ஆண்டு தை மாதம் தொடக்கம் ட்றிமர் மண்டபத்தில் நடத்தும்.

1. பாலர் வகுப்புகள் 31-1-1978-ந் திகதிக்குப்பின் பிறந்தவர்கள்.
2. பெண்களுக்கு பாலர் பாடசாலை ஒரு வருட ஆசிரியப் பயிற்சி [ஆங்கிலம், தமிழ்]
3. ஆங்கிலப்பேச்சும், பேச்சுப் பயிற்சியும் ஆண்பிள்ளைகளுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் [1-ம் வகுப்பு தொடக்கம் 8-ம் வகுப்பு வரை]
4. G. C. E. சாதாரண வகுப்புக்குரிய ஆங்கிலமும் கணிதமும்.

விண்ணப்பங்கள் பாலர் வகுப்புகளுக்கு டிசம்பர் 15-ந் திகதிக்கு முன்னும் மற்ற வகுப்புகளுக்கு கொடுக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்களை நிரப்பி தை மாதம் 1983-ம் ஆண்டு 3-ந் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செல்வி எம். தம்பையா.
இல. 9, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
[5416]

## இயக்கத்தின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சில் குறிப்பிட்டார்.

யாழ். மேயர் திரு இராசா விசுவநாதன் பேசுகையில் கூறியதாவது:-

"உயர் வகுப்பு, பட்டப் படிப்புக்கள் மேலும் பட்ட மேற்படிப்புக்களைப் படிக்கும் மாணவர்களது வேதனையை நூலகத்தின் ஒரு பகுதி தணிக்கும்.

இத்திறப்புவிழாவில் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு நடராசா, யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, யாழ். மாவட்ட எம். பிக்கள், யாழ். மாவட்ட அபிவிருத்திசபை, உறுப்பினர்கள், யாழ். மாநகராட்சிமன்ற உறுப்பினர்கள், இந்து - கிறிஸ்தவ இஸ்லாமிய மதப்பெரியார்கள் மற்றும் யாழ். பொதுசன நூலக ஆலோசனைக்குழுவினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ் மாநகராட்சி மன்ற ஆணையாளர் திரு சி. கே. சிவஞானம் வரவேற்புரை நிகழ்த்தினர்.

வண பிதா பிரான்சிஸ் யோசவ் அடிகளார் ஆசியுரை வழங்கினர். (மா)

## மனுக்குலத்தை ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தானம் விளங்கியது. எனவே இந்த பொருளாதார அடக்கு முறை மண்ணில் இருந்த பாரதி ஜமீனில் தான் வேலை பார்த்தசம்பவத்தை "கைகட்டிச் சேவை" எனக் கசப்போடு கூறுவது அவன் நிலமானியத்தை எவ்வளவுதூரம் வெறுத்தார் என்பததைக்காட்டுகின்றது

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச்சங்கம்

## இறுதிப் போட்டிகள்

### 2-ம், 3-ம் குழுக்கள்

11 - 12 - 82 சனிக்கிழமை [இன்று]
நேரம்; பி.ப 2 15

3-ம் குழு [2-ம் பிரிவு] — சென் ஜேம்ஸ் ம. வி. எதிர் அராலி இந்துக் கல்லூரி

3-ம் குழு (1-ம் பிரிவு) — யாழ். மத்திய கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி

2-ம் குழு (1-ம் பிரிவு) — மகாஜனா கல்லூரி எதிர் ஸ்கந்தவரோதயா கல்லூரி

முதன்மை விருந்தினர்:
ஜனாப். எம். எம். மன்சூர் அவர்கள்
[பிரதம கல்வி அதிகாரி, யாழ்ப்பாணம்]

ஒஸ்மானியா கல்லூரி, யாழ்ப்பாணம்.
10 - 12 - 82

க மு. கா. ஹமீட்
உதைபந்தாட்டச் செயலாளர்.
5440

## மாத்தளையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்டி மாத்தளை வீதி போக்குவரத்துச் செய்யமுடியாதபடி பாதிக்கப்பட்டுள்ளது.

பொலனறுவை மாவட்டமும் தொடர்ந்து பெய்யும் மழையினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

## வாரியார் சொற்பொழிவு

(புலோலி)

'திருமால் தசாவதாரங்கள்' என்னும் பொருள்பற்றி புலோலி வல்லிபுர ஆழ்வார் கோவிலில் நாளை காலை 'அருள்மொழி அரசு' திருமுருக கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவு இடம்பெறுகிறது.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகரத்தினம்மா சங்கரப்பிள்ளை

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த நாகரத்தினம்மா சங்கரப்பிள்ளை காலமானார். இவர் காலஞ்சென்ற முதலியார் ப மு சங்கரப்பிள்ளை [J. P] யின் அன்பு மனைவியும், இராஜசிங்கம் [ஓமான்], பூபாலசிங்கம் [யாழ் மாவட்டசபை உறுப்பினர்], தர்மகுலசிங்கம் கணக்காளர், கப்பல் கூட்டுத்தாபனம்), சற்குணசிங்கம் பாரெய்ஹ்ன்) பாலமுத்துசிங்கம் [பொறியியலாளர் நீர்வழங்கல், வடிகாலமைப்பு சபை - புறாணை], செல்வராணி, சிவநேசமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் தெய்வேந்திரராசா [உதவி வைத்திய அதிகாரி, சிலாபம்], நல்லைநாதன் [உதவிப்பணிப்பாளர், கடற்றொழில் திணைக்களம் கொழும்பு] புவனேஸ்வரி, தயாநிதி, காமினி, இந்திரலேகா ஆகியோரின் அன்பு மாமியாருமாவார் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். 5442

## மரண அறிவித்தல்

### அச்சலிங்கம் - ஜனகன்

இளைப்பாறிய குடியகல்வுத்திணைக்கள உதவி ஆணையாளரும், தற்போதைய மக்கினன் மக்கன்சி யாழ்ப்பாணக்கிளை நிறுவனத்தின் விற்பனை முகாமையாளருமாகிய அச்சலிங்கம் ஜனகன் காலமானார். இவர் காலஞ்சென்ற அச்சலிங்கம் தம்பதிகளின் மூத்தபுதல்வரும், தேவநாயகசௌந்தரியின் அன்புக்கணவரும், திருமதிகள் சாரதா பரராசசிங்கம், மகேஸ்வரி பொன்னம்பலம், சரோஜினி குமாரசாமி, திரு. வியாசன், காலஞ்சென்ற வசிட்டன் ஆகியோரின் சகோதரனும், காசிநாதர் கந்தையாவின் (கல்வி அலுவலகம் முல்லைத்தீவு மைத்துனரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 12-12-1982 ஞாயிறு காலை 10-00 மணிக்கு புத்தூரில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றாரும், நண்பர்களும், உறவினர்களும் ஏற்றுக்கொள்ளவும் 5453

## மரண அறிவித்தல்

### இராசரத்தினம் நக்கீரன்

உரும்பராயைச் சேர்ந்த நக்கீரன் அகால மரணமானார். இவர் ஓய்வுபெற்ற அனுராதபுரம் புகையிரத நிலைய பிரதம அதிபர் இராசரத்தினம், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி யோகலட்சுமி இராசரத்தினம் ஆகியோரின் நான்காவது அன்பு மகனும் சித்தார்த்தன் (கனடா), பகீரதன் (இங்கிலாந்து), பரந்தாமன், அரவிந்தன் [பரியோவான் கல்லூரி] ஆகியோரின் அன்பு சகோதரனும் காலம் சென்ற மலாயன்பென்சனர் அ. இளையதம்பியின் பேரனுமாவார். அன்னாரது பூதவுடல் தேவாரபாராயணத்தைத்தொடர்ந்து இன்று சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் அன்னாரது விருப்பப்படி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு கையளிக்கப்படும். 5451


நத்தார் புதுவருட விற்பனை! விரையுங்கள்!!

யாழ் நகரில் நவீன தளபாடங்கள் விற்பனையில் சாதனை நிலைநாட்டியவர்கள் -

## ஸ்ரான்லி பேணிசிங் பலஸ்



அவர்களின்

நேர்த்தியான, நிகரற்ற தளபாடங்கள் உங்கள் இல்லங்களுக்கு மேலும் மெருகூட்டும்

10வது ஆண்டு நிறைவையொட்டி
10% கழிவுடன்

★ மெத்தைகள் ★ நவீன தளபாடங்கள்

பெற்றுக்கொள்ளலாம்

### ஸ்ரான்லி பேணிச்சர் காட்சியறை

5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ் நகர். போன்: 23763

குறிப்பு: எமது ஸ்தாபனத்திற்கு யாழ் நகரில் வேறு கிளைகள் இல்லவே இல்லை



இன்று

யாழ் நகரில் கோலாகலமான திறப்புவிழா

(11-12-82) சனிக்கிழமை காலை 11 மணிக்குமேல் வரும் சுபவேளையில்

## ஹப்பி ரெக்ஸ்ற

ஸ்தாபனத்தார் தங்கள் இஸ்தாபனம் ஒன்றை நவீன சந்தை மேல்மாடியில் ஆரம்பிக்க இருப்பதால் அன்பர்கள் ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வருகைதந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ ஆடவர்களுக்கான றெடிமேட் ஆடைகளுக்கு ★



HAPPY TEXT
தொலைபேசி: 24197

நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

5433


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1982-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number Q.B. 100236/81. Eelanaadu - P. O. Box; 49. Telegram: Eelanaadu, Telephone; 22389 — 24126.